ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

பெரியாழ்வார் அருளிச்செய்த

# ॥ பின்னைமணாளனை ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ பின்னைமணாளனை ॥

## குழல் வாரக் காக்கையை வாவெனல்

‡பின்னை மணாளனைப்⋆ பேரில் கிடந்தானை⋆
முன்னை அமரர்⋆ முதல் தனி வித்தினை⋆
என்னையும் எங்கள்⋆ குடி முழுதாட் கொண்ட⋆
மன்னனை வந்து குழல்வாராய் அக்காக்காய்!⋆
மாதவந் தன் குழல்வாராய் அக்காக்காய்! (1)

பேயின் முலை உண்ட⋆ பிள்ளை இவன் முன்னம்⋆
மாயச் சகடும்⋆ மருதும் இறுத்தவன்⋆
காயாமலர் வண்ணன்⋆ கண்ணன் கருங்குழல்⋆
தூய்தாக வந்து குழல்வாராய் அக்காக்காய்!⋆
தூமணி வண்ணன் குழல்வாராய் அக்காக்காய்! (2)

திண்ணக் கலத்தில்⋆ திரை உறிமேல் வைத்த⋆
வெண்ணெய் விழுங்கி⋆ விரைய உறங்கிடும்⋆
அண்ணல்⋆ அமரர் பெருமானை⋆ ஆயர் தம்
கண்ணனை வந்து குழல்வாராய் அக்காக்காய்!⋆
கார் முகில் வண்ணன் குழல்வாராய் அக்காக்காய்! (3)

பள்ளத்தில் மேயும்⋆ பறவை உருக் கொண்டு⋆
கள்ள அசுரன்⋆ வருவானைத் தான் கண்டு⋆
புள்ளிதுவென்று⋆ பொதுக்கோ வாய் கீண்டிட்ட⋆
பிள்ளையை வந்து குழல்வாராய் அக்காக்காய்!⋆
பேய்முலை உண்டான் குழல்வாராய் அக்காக்காய்! (4)

கற்றினம் மேய்த்துக்⋆ கனிக்கொரு கன்றினை⋆
பற்றி எறிந்த⋆ பரமன் திருமுடி⋆
உற்றன பேசி⋆ நீ ஓடித் திரியாதே⋆
அற்றைக்கும் வந்து குழல்வாராய் அக்காக்காய்!⋆
ஆழியான் தன் குழல்வாராய் அக்காக்காய்! (5)

www.prapatti.com

கிழக்கில் குடி மன்னர்⋆ கேடிலாதாரை⋆
அழிப்பான் நினைந்திட்டு⋆ அவ்வாழி அதனால்⋆
விழிக்கும் அளவிலே⋆ வேர் அறுத்தானைக்⋆
குழற்கணியாகக் குழல்வாராய் அக்காக்காய்!⋆
கோவிந்தன் தன் குழல்வாராய் அக்காக்காய்! (6)

பிண்டத் திரளையும்⋆ பேய்க்கிட்ட நீர்ச் சோறும்⋆
உண்டற்கு வேண்டி⋆ நீ ஓடித் திரியாதே⋆
அண்டத்தமரர்⋆ பெருமான் அழகமர்⋆
வண்டொத்திருண்ட குழல்வாராய் அக்காக்காய்!⋆
மாயவன் தன் குழல்வாராய் அக்காக்காய்! (7)

உந்தி எழுந்த⋆ உருவ மலர் தன்னில்⋆
சந்தச் சதுமுகன் தன்னைப்⋆ படைத்தவன்⋆
கொந்தக் குழலைக்⋆ குறந்து புளி அட்டி⋆
தந்தத்தின் சீப்பால் குழல்வாராய் அக்காக்காய்!⋆
தாமோதரன் தன் குழல்வாராய் அக்காக்காய்! (8)

மன்னன் தன் தேவிமார்⋆ கண்டு மகிழ்வெய்த⋆
முன் இவ் உலகினை⋆ முற்றும் அளந்தவன்⋆
பொன்னின் முடியினைப்⋆ பூவணை மேல் வைத்து⋆
பின்னே இருந்து குழல்வாராய் அக்காக்காய்!⋆
பேராயிரத்தான் குழல்வாராய் அக்காக்காய்! (9)

‡கண்டார் பழியாமே⋆ அக்காக்காய்⋆ கார் வண்ணன்
வண்டார் குழல்வார⋆ வா என்ற ஆய்ச்சி சொல்⋆
விண் தோய் மதிள்⋆ வில்லிபுத்தூர்க் கோன் பட்டன் சொல்⋆
கொண்டாடிப் பாடக்⋆ குறுகா வினை தாமே! (10)

॥ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com